# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**நிலையறிபரீட்சை – 2021**

**சங்கீதம் I,II**

| | | |
|---|---|---|
| பெயர் ∴ சுட்டெண் :- ………………… | தரம் :- 9 | நேரம் :- 2 மணித்தியாலம் |

பகுதிI

1) தாயினும் நல்லதலைவராய் விளங்கும் இறைவன் வீற்றிருக்கும் தலம்
   1. திருக்கேதீச்சரம்
   2. திருக்கோணேச்சரம்
   3. முன்னேச்சரம்
   4. நகுலேச்சரம்

2) மிஸ்ர ஜாதி ஜம்பை தாளத்தின் குறியீடாய் அமைவது
   1. 13uo
   2. 15uo
   3. 17uo
   4. 19uo

3) பின்வருவனவற்றுள் நரம்புக் கருவியாய் அமைவது
   1. தபேலா
   2. வயலின்
   3. கடம்
   4. தாளம்

4) வைதீக கானத்தைச் சேர்ந்த உருப்படியாய் அமைவது
   1. கீர்த்தனை
   2. வர்ணம்
   3. சிறுவர் பாடல்
   4. நாட்டார்பாடல்

5) இந்தளப்பண்ணைக் குறிக்கும் இராகமாய் அமைவது
   1. சங்கராபரணம்
   2. கல்யாணி
   3. ஆரபி
   4. மாயாமாளவகௌளை

6) ஜனக இராகங்களின் மொத்ததொகை
   1. 16
   2. 108
   3. 72
   4. 175

7) அப்பியாச வரிசைகளை இயற்றிய வாக்கேயகாரர்
   1. புரந்தரதாஸர்
   2. தியாகராஜஸ்வாமிகள்
   3. பொன்ஸ்ரீவாமதேவன்
   4. வீரமணிஜயர்

8) நீர் கற்ற உருப்படிகளில் சஞ்சாரி கீதமாய் அமைவது
   1. ஸ்ரீராம ஸ்ரீராம
   2. சந்தனத்தையே அரைத்து
   3. வாசரவணனே
   4. உன்னைத்துதிக்க



kalvi.lk

9) ஸ்ருதிக்கென உருவாக்கப்பட்ட தந்தி வாத்தியமாய் அமைவது
1. வயலின் 2. வீணை
3. கிற்றார் 4. தம்புரா

10) பிலஹரி இராகத்தின் தாய் இராகம்
1. சங்கராபரணம் 2. ஹரிகாம்பேதி
3. கல்யாணி 4. மாயாமாளவகௌளை

11) ஜன்னிய இராகத்தின் மறுபெயர்
1. மேள இராகம் 2. கர்த்தா இராகம்
3. பிறந்த இராகம் 3. மேளகர்த்தா இராகம்

12) ஒரு லகுவையும் ஒரு சதுஸ்ரஜாதித்ருதத்தையும் கொண்டதாளம்
1. ஏகம் 2. ஜம்பை
3. ரூபகம் 4. திரிபுடை

13) வேணு என அழைக்கப்படும் வாத்தியம்
1. புல்லாங்குழல் 2. மகுடி
3. சங்கு 4. கொம்பு

14) ஒரு கதையைப் பாட்டுக்கள் மூலம் விளக்கும் நாடகவகை
1. நவீனநாடகம் 2. இசைநாடகம்
3. ஓரங்க நாடகம் 4. நாட்டியநாடகம்

15) திவ்ய நாமக்கீரத்தனையை இயற்றியவர்
1. வீரமணிஐயர் 2.சுப்ரமணியபாரதியார்
3. புரந்தரதாஸர் 4. தியாகராஜஸ்வாமிகள்

16) பாடல்களைசுயமாக இயற்றுவதால் மேம்படும் திறன்
1. வாசிப்புத்திறன் 2. கிரகிப்புத்திறன்
3. ஆக்கத்திறன் 4. இரசனைத்திறன்

17) பாடலில் வரும் ஸ்வரப்பகுதியையும் சாகித்தியப்பகுதியையும் முறையே அழைக்கும் ஒழுங்கு
1. தாதுமாது 2. மாதுதாது
3. நிபந்தம அநிபந்தம் 4. அநிபந்தம் நிபந்தம்

18) ஒரு அலங்காரத்தை இரண்டாங்காலத்தில் பாடும் போது எடுக்கும் அட்சர எண்ணிகை
1. 10 2. 5
3. 15 4. 7

19) * // இவ்விரண்டு குறியீடுகள் உணர்த்துவது முறையே
1. ஆவர்த்தனம், அன்னியஸ்வரம் 2. அங்கமுடிவு, லகு
3. அன்னியஸ்வரம், ஆவர்த்தனம் 4. லகு, அங்கமுடிவு



kalvi.lk

20) 28ஆவது மேளகர்த்தா இராகமாய் அமைவது

1. சங்கராபரணம்
2. கரஹரப்ரியா
3. மாயாமாளவகௌளை
4. ஹரிகாம்போதி

(20×2=40) புள்ளிகள்

## பகுதி 2

பின்வரும் வினாக்களில் ஏதாயினும் நான்கு வினாக்களுக்கு விடைதருக

1) அ. தாளத்தில வரும் முதல் மூன்று அங்கங்களையும் , அவற்றின் குறியீடுகளையும் தருக

ஆ. அவற்றில் ஜாதி பேதமடையும் அங்கத்தையும், ஐந்து ஜாதிகளையும் , அதன் குறியீடுகளையும் தருக

இ. சப்ததாளங்களையும் , அவற்றின் அங்க அடையாளங்களையும் அட்டவணைப்படுத்துக.

(3+5+7=15) புள்ளிகள்

2) அ. கீர்த்தனை, ஜதிஸ்வரம் ஆகியஉருப்படிகளில் ஏதாவது ஓர உருப்படி பற்றி விரிவான இலட்சணம் எழுதுக .(உருப்படியின் சாகித்தியஉள்ளடகம், அங்கங்கள், சிறப்பியல்புகள் பற்றிகுறிப்பிடுக).

ஆ. நீர் குறிப்பிட்ட உருப்படிகளுக்கு இரு உதாரணங்கள் தருக.

இ. நீர் குறிப்பிட்ட உருப்படியை இயற்றிய வாக்கேயகாரர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

(11+2+2=15) புள்ளிகள்

3) மாயாமாளவகௌளை அல்லது சங்கராபரண இராகம் பற்றிகீழ் வரும் தலைப்புகளின் கீழ் விளக்குக.

அ.இராகத்தின் மேள எண்

ஆ.இராகத்தின் ஆரொகண அவரோகணம்

இ.இராகத்தின் ஸ்வரஸ்தானங்கள்

ஈ.இராகத்தின் சிறப்பம்சங்கள் (பண், பாடும் நேரம், பிரதிமத்திம இராகம், ஹிந்துஸ்தானியில் வழங்கும் பெயர் போன்றவற்றுடன் ஏனைய அம்சங்களை உள்ளடக்குக)

உ.இந்த இராகத்திலமைந்த உருப்படிகள்

(2+2+2+6+3=15) புள்ளிகள்

4) அ. ஜனக இராகத்தின் மறு பெயர்கள் இரண்டுதருக.

ஆ. ஜனக இராகத்திற்கு இருக்கவேண்டிய நான்கு பண்புகளும் எவை?

இ. ஜன்னிய இராகத்தின் பிரிவுகள் எவை?

ஈ. ஜன்னிய இராகத்தின் பிரிவுகளில் ஏதேனும் நான்கிற்கு உதாரணம் தந்து விளக்குக.

(2+2+3+8=15) புள்ளிகள்



kalvi.lk

5) 14 0 14

ஸரிகரி/ ஸரி / ஸரிகம//.

அ. மேற் குறித்த ஸ்வர அமைப்பை உடைய அலங்காரம் யாது?

ஆ. இத் தாளத்தின் மொத்த அட்சரஎண்ணிக்கை யாது?

இ. இவ் அலங்காரத்தின் அடுத்த இரு அடிகளையும் எழுதுக.

ஈ. இவ் அலங்காரத்தின் இராகம் தாளம் இயற்றியவர் பெயர் தருக.

உ.'வாசரவணனே' என்ற கீதம் அமைந்த இராகம் தாளம் ஆரோகண அவரோகணம் இயற்றியவர் பெயர் என்பவற்றைத் தருக.

(2+2+4+3+4=15) புள்ளிகள்

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page